செய்தி வெளியீடு எண்:1105 நாள்:13.11.2021

## செய்தி வெளியீடு

## தூத்துக்குடியில் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும்

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு

தூத்துக்குடி மாநகர மக்களின் தந்தை என்று இன்றும் அன்போடு அழைக்கப்படும் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் நினைவினைப் போற்றிடும் வகையிலும், அன்னாரின் புகழுக்கு பெருமைச் சேர்க்கின்ற வகையில், தூத்துக்குடியில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது

தூத்துக்குடி மாநகர மக்களின் நலன் காத்திட தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் ஆவார். ஏறத்தாழ 30 ஆண்டு காலம் நகரமன்ற உறுப்பினராகவும், அய்ந்து முறை நகரமன்றத் தலைவராகவும் இருந்த காலத்தில், ஜாதிமத பேதமின்றி அம்மாவட்ட அடித்தள மக்களின் அடிப்படைக் கல்வி மேம்பாடு, குடிசை வீடுகள் மேம்பாடு, தீண்டாமை எதிர்ப்பு, கூட்டுறவு வங்கிக் கடனுதவி, சுகாதார மையங்கள், சனிக்கிழமைச் சந்தை, அங்காடிகள், பொதுவான கல்லறைத் தோட்டம் என நல்லபல திட்டங்களைச் செயல்படுத்தி சாதனை படைத்தவர். குறிப்பாக, 1927ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம் மிகக் கடுமையான குடிநீர் பஞ்சத்தில் சிக்கித் தவித்தபோது, மிகுந்த தொலைநோக்குப் பார்வையுடன், நெல்லை தாமிரபரணி ஆற்றிலிருந்து குழாய் மூலம் நீர் கொண்டு வரும் திட்டத்தினைத் திறம்பட செயல்படுத்தி வெற்றி கண்ட அத்திட்டம் அம்மாநகர மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வருகிறது.

தன்னலமற்ற தனது தியாகத்தினால், அம்மாவட்ட மக்களின் மனங்களில் இன்றும் உயர்ந்து நிற்கும் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் நினைவினைப் போற்றிடும் வகையில், அன்னாரின் பிறந்த நாளான நவம்பர் 15 அன்று அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. கழக அரசு பொறுப்பேற்றதும் ராவ் பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களுக்கு நினைவு மணிமண்டபம் கட்டப்படும் என்று தேர்தல் அறிக்கையில் அறிவித்ததற்கிணங்க, அவருடைய பிறந்த நாளில் அன்னாரின் புகழுக்கு மென்மேலும் பெருமைச் சேர்க்கின்ற வகையில் தூத்துக்குடி மாநகரில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று தமிழக அரசின் சார்பில் அறிவிக்கப்படுகிறது.

.......

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**